யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை (2) – 2020

தரம் - 12 (2021) | விவசாய விஞ்ஞானம் - 1

பெயர் / சுட்டெண் : ..... திரு.ர.யாழினி B.Sc (Hons), PGDE

அறிவுறுத்தல்கள் :

- கேட்கப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் பதிலளிக்குக.
- வினாக்களுக்கான விடைகள் விடைத்தாள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களும் உரிய பாட அலகுகளை நன்கு கற்று விளங்கி பதிலளிக்க முயலுங்கள்.
- பாடசாலை தொடங்கும் போது விடைத்தாள்களை கோவையில் இட்டு வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

1) விவசாய திணைக்களத்தினால் ஆற்றப்படும் பணி அல்லாதது பின்வருவனவற்றில் எது?
1. ஆராய்ச்சிகளைநடாத்துதல்
2. பயிர் வலயமாக்குதல்
3. விவசாயகாணி இடாப்பைப் பேணுதல்
4. பயிர்ச் செய்கைத் திட்டமிடல்
5. வித்துக்களை அத்தாட்சிப்படுத்தல்

2) கீழ்வரும் கூற்றுக்களில் சரியானதைத் தெரிவுசெய்க
1. ஒளியின் செறிவை சூரிய ஒளிர்வுமானி மூலம் அளவிடலாம்
2. தன்னியக்க மழைமானி மூலம் மழைவீழ்ச்சியின் செறிவை அளவிடமுடியாது
3. இலங்கையின் உலர் வலயப்பகுதியில் துவிமான மழைவீச்சிக் கோலம் உள்ளது
4. காற்றின் வேகம் அதிகரித்துச் செல்லும் போதுபயிர்ச் செய்கையில் அதிகவிளைச்சலைப் பெற்றுக் கொள்ளமுடியும்
5. வளிமண்டலத்தில் அடங்கியுள்ளநீரின் அளவேஈரப்பதன் எனப்படும்.

3) அதிக மழைவீழ்ச்சியினால் பயிர்ச் செய்கைக்கு ஏற்படும் பாதிப்பாக கருத முடியாதது எது?
1. பூக்களும் பிஞ்சுகளும் உதிர்தல்
2. வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு பயிர் சேதமடைதல்
3. நீர்வடிப்பு குறைவடைதல்
4. மண் நுண்ணங்கிகளில் தொழிற்பாடு அதிகரித்தல்
5. மண்சரிவு ஏற்பட்டு பயிர்கள் சேதமடைதல்

4) விவசாய- சூழலியல் வலயங்களினை வரையறுப்பதற்கு அடிப்படையாக அமைவது
1. வெப்பநிலை, மழைவீழ்ச்சி, மண்வகை
2. வெப்பநிலை, மழைவீழ்ச்சி, பயிர்வகை
3. மழைவீழ்ச்சி. மண்வகை, பயிர்வகை
4. மண்வகை, பயிர்வகை, குத்துயரம்
5. குத்துயரம், வெப்பநிலை, மழைவீழ்ச்சி

5) மண் உற்பத்திக் காரணி அல்லாதது பின்வருவனவற்றில் எது?
1. தாய்ப்பாறைப் பொருள்
2. தரைத்தோற்றம்
3. காலநிலை,வானிலை

www.kedu.lk

4. சேதனப்பொருட்கள்
5. உயிர்க்காரணிகள்

6) மண் கட்டமைப்பு தொடர்பான கூற்றுக்களில் தவறானதுஎது?
1. மண் பக்கப்பார்வையில் மேலான படைகளில் மண் இழையமைப்பு தனிமணியுரு அமைப்பை கொண்டதாகும்
2. மண் கட்டமைப்பு குழைவதற்கு பிரதான காரணம் Fe^{3+} ஆகும்
3. மண் ஈரலிப்படைதல், உலர்தல், என்பவற்றிற்கு உள்ளாகும் போது மண்ணின் நலிவான பகுதிகளிற்கு வெடிப்பு ஏற்படும்.
4. மண்ணின் துணையான துணிக்கைகள் உருவாவதற்கு காபனேற், களி, சிலிக்கேற்று போன்ற பிணைப்புக் காரணிகள் காரணமாகின்றன.
5. தாவரவேர்களின் தொழிற்பாடு பற்றி அறிந்துகொள்வதற்கு மண் கட்டமைப்பு அவசியமாகின்றது.

7) மண் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு சேர்க்கப்படத்தக்கது
1. சுண்ணாம்பு
2. ஜிப்சம்
3. டோலமைற்று
4. சேதனப் பொருள்
5. இரசாயனப் பசளை

8) தாவரத்திற்கு கிடைக்கத்தக்க மண் நீர்,
1. வழிந்தோடும் நீரில் உள்ளது
2. மிகையானநீரில் உள்ளது
3. மயிர்த்துளைநீரில் உள்ளது
4. பருகுநீரில் உள்ளது
5. புவியீர்ப்புநீரில் உள்ளது

9) பாடசாலைக் காணியின் நிலப்பகுதியின் முதல் பண்படுத்துகைக்குமுன்னரும் மாணவர்கள்,பின்வரும் மண்ணியல்புகளைப் பரிசோதித்தனர்.

A. மண்இழையமைப்பு
B. கட்டமைப்பு
C. உண்மைஅடர்த்தி
D. தோற்றஅடர்த்தி
E. நுண்டுளைமை
F. எழுமாற்றுக் கரடுமை

இல்லியல்புகளிடையேமுதல் பண்படுத்துகைக்குப் பின்னர் மாற்றங்கள் எதிர்பார்க்கப்படத்தக்க இயல்புகள்

1. A,B,C,D ஆகியன
2. A,C,D,E ஆகியன
3. B,C,D,E ஆகியன
4. B,D,E,F ஆகியன
5. C,D,E,F ஆகியன

www.lkedu.lk

10) மண் வளம் பற்றிய சில கூற்றுக்கள் கீழே காணப்படுகின்றன.

A. மண்ணரிப்பு மூலம் மண்ணின் இரசாயன, பௌதீக, உயரியல் இயல்புகள் குன்றும்

B. பகுதியாக சிதைவடைந்த சேதனப் பொருட்கள் காரணமாக மண் வளங்குன்றல் ஏற்படும்

C. சேனைப் பயிர்சிசெய்கை முறைகளைக் கையாள்வதால் மண் வளங்குன்றல் ஏற்படும்

1. A,B சரி
2. B,C சரி
3. C மட்டும் சரி
4. B மட்டும் சரி
5. A,B,C சரி

11) தாவரத்தின் முதிர்ந்த இழையங்களிலிருந்து இளைமையானதாவர இழையங்களிற்கு உரியத்தினூடு செல்லக் கூடிய மூலகம் அல்லாதது பின்வருவனவற்றில் எது?

1. K
2. ca
3. mg
4. s
5. Fe

12) தாவர போசனை மூலகங்கள் பற்றிய சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A. Co – அவரைதாவரங்களில்நைதரசன் பதிக்கஉதவும்

B. Si – புற் குடும்பதாவரங்களில் தாங்கும் தன்மையை ஏற்படுத்தும்

C. Ni – தாவரங்களில் பிரசாரண சமநிலையை பேணுகின்றது

D. Na – தாவரங்களில் அயன் சமநிலையை பேணுகின்றது

1. A,B,C சரி
2. A,B,D சரி
3. A,C,D சரி
4. B,C,D சரி
5. A,B,C,D சரி

13) 15:10:0 வளமாக்கிக் கலவையின் 1000kg ஐ செய்வதற்கு தேவையான மும்மை மேற் பொசுபேற்றின் (45%) அளவு அண்ணளவாக,


1. 450kg
2. 333kg
3. 222kg
4. 45kg
5. 22kg

www.kedu.lk

14) கூட்டெரு தயாரிப்பதற்கான ஆரம்பச் கலவையில் நுண்ணுயிர்களிற்கு சாதகமான C/N விகித வீச்சு பின்வருவனவற்றுள் எது?

1. 4-9
2. 2-6
3. 7-9
4. 4-6
5. 5-10

15) தாவர விளைச்



பசளை இடப்படும் அளவிற்கு ஏற்ப தாவர விளைச்சல் மேலே வரைபில் காட்டப்பட்டுள்ளது.

இவ்வரைபில் உயர் இலாபம், உயர் அறுவடைக்குரியபுள்ளிகள் முறையேபின்வருவனவற்றில் எது?

1. B,C
2. A,B
3. A,C
4. B,D
5. A,D

16) இழிவுப் பண்படுத்தலின் அனுகூலமாக அமைய முடியாதது

1. நிலப்பண்படுத்தலிற்கான செலவு குறைவு
2. சாய்வான நிலங்களில் மண்ணரிப்பு குறைவடையும்
3. பண்ணை இயந்திரங்களின் பயன்பாட்டால் மண் இறுக்கமடைவது தவிர்க்கப்படும்
4. பயிர் மீதி எஞ்சுவதால் அவை சிதைவடைந்து மண் இயல்பு மேம்படும்
5. நிலம் பண்படுத்த கூடியகாலம் எடுப்பதால் போகங்களிற்கு இடையிலான இடைவெளியை அதிகரிக்கலாம்

17) இயந்திரவலுவால் இயக்கப்படும் நிலப் படுத்தல் உபகரணம் அல்லாதது பின்வருவனவற்றுள் எது?

1. வட்டத்தட்டுக்கலப்பை
2. நாட்டுக்கலப்பை
3. அச்சுத்தட்டுக் கலப்பை
4. முட்கலப்பை
5. சுழல் கலப்பை

18) நீர்பாசனத்தில் செல்வாக்குச் செலுத்தும் மண்காரணி அல்லாதது பின்வருவனவற்றில் எது?

1. மழைவீழ்ச்சி
2. மண்சூழல்
3. மண் கட்டமைப்பு
4. தரைத்தோற்றம்
5. மண் இழையமைப்பு

www.lkedu.lk

19) தூவல் நீர்பாசனம் பற்றிகீழ்வரும் கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன.

A. அதிக காற்றுக் கொண்ட பிரதேசங்களிற்கு மிகச் சிறந்தது

B. நீர்க்கசிவு கூடிய மணல் மண்ணிற்கு இம்முறைபொருத்தமானது

C. சாய்வானதரைகளில் இம்முறையை உபயோகிக்கலாம்

மேற்படி கூற்றுக்களில் சரியானது,

1. A மட்டும் சரி
2. B மட்டும் சரி
3. A,C சரி
4. B,C சரி
5. A,B சரி

20) வித்துமுளைத்தலின் கட்டங்கள் கீழேதரப்பட்டுள்ளன.

A. நொதியங்கள் தொழிற்படுதல்

B. வளர்ச்சி ஆரம்பித்தல்

C.நாற்று வெளிப்படல்

D.வித்துறை வெடித்தல்

E.உட்கொள்ளுகை மூலம் நீர் உட்புகுதல்

வித்துமுளைத்தலில் சரியான ஒழுங்கைக் குறிப்பது கீழ்வருவனவற்றில் எது?

1. D,A,B,E,C
2. E,A,B,D,C
3. D,B,A,C,E
4. E,B,A,C,D
5. A,C,D,B,E

21) நிலக்கீழ் தண்டு வகைக்குரிய தாவரம் அல்லாதது,

1. இஞ்சி
2. சேப்பங்கிழங்கு
3. வெங்காயம்
4. உருளைக்கிழங்கு
5. வல்லாரை

22) இழைய வளர்ப்பு ஊடகத்தில் (MS) காணப்படும் மாபோசனைக் கூறு அல்லாதது,

1. Fe^{2+}
2. Mg^{2+}
3. NH^{4+}
4. Ca^{2+}
5. No^{3-}

23) தூயவழி உயரமான தாவரம் தூயவழி குட்டையான தாவரத்துடன் கலப்புப்பிறப்பாக்கம் செய்யப்பட்டது. மெண்டலின் விதிக்கமைய புனரிகள் கடத்தப்படுகின்றதெனில் கீழ்வரும் கூற்றுக்களில் சரியான எது? (உயரம் குட்டைக்கு ஆட்சியானது)


1. முதலாவது சந்ததி யாவும் குட்டையானவை
2. முதலாவது சந்ததி யாவும் உயரமானவை
3. முதலாவது சந்ததி உயரம்: குட்டை 1: 3

www.lkedu.lk

4. இரண்டாவது சந்ததி உயரம்: குட்டை 1: 3
5. இரண்டாவது சந்ததி உயரம்: குட்டை 3: 1

24) தாவர ஒளித்தொகுப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுள் அகக்காரணியாக கருத முடியாதது,
1. ஒளிச்செறிவு
2. ஒட்சிசன் செறிவு
3. ஒளித்தொகுப்பு நிறப்பொருள்
4. இலைப்பரப்பின் அகலம்
5. இலைவாய்களின் எண்ணிக்கை

25) ஆவியுயிர்ப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணி தொடர்பான வரைவு தரப்பட்டுள்ளது.



இதில் Xஅச்சு, Yஅச்சு என்பவற்றை சரியான ஒழுங்கி குறிப்பது,
1. ஈரப்பதன், ஆவியுயிர்ப்பு வீதம்
2. ஒளிச்செறிவு, ஆவியுயிர்ப்பு வீதம்
3. வெப்பநிலை, ஆவியுயிர்ப்பு வீதம்
4. ஆவியுயிர்ப்பு வீதம், காற்றின் வேகம்
5. ஆவியுயிர்ப்பு வீதம், ஈரப்பதன்

www.lkedu.lk

பகுதி II
பகுதி A –அமைப்புக் கட்டுரை

01. A.

1. விவசாய காலநிலை அலகை அமைப்பதற்கான இடத்தைத் தெரிவுசெய்யும் போது நீர் கவனத்தில் கொள்ளும் விடயங்கள் 3 தருக?

   .....
   .....
   .....

2. விவசாய காலநிலை அலகில் பின்வரும் உபகரணங்கள் தாபிக்கும் போது பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் இவ்விரண்டைக் குறிப்பிடுக?

   மழைமானி –

   .....
   .....

   அனிலமானி

   .....
   .....

ஈர உலர்வெப்பமானி –

……

……

ஆவியாதல் தட்டு –

……

……

3. விவசாய காலநிலை அலகில் தரவுகள் பெறப்படும் நியம நேரங்கள் எவை?

……

……

B. உலகலாவிய காலநிலை மாற்றம் காரணமாக விவசாய உற்பத்தியில் குறைவு ஏற்படுகின்றது.

1. காலநிலை மாற்றங்கள் ஏற்படக் காரணமான பச்சைவீட்டு நிலைமையை ஏற்படுத்தும் மனித நடவடிக்கைகள் 3ஐ குறிப்பிடுக.

……

……

2. காலநிலை மாறுதல்களை கட்டுப்படுத்துவதற்காக விவசாயத்துறையில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் 4 குறிப்பிடுக.

……

……

C. மண்ணின் வகைக்கேற்ப பயிர் உற்பத்தி கோலங்களும் வேறுபட்டு காணப்படும்

1. மண் உற்பத்தி காரணிகள் எவை?

……

……

2. பாறைகள் வானிலையழிதலில் செல்வாக்குச் செலுத்தும் இரசாயன காரணிகள் எவை?

……

……

3. மண்ணரிப்பின் படிமுறைகள் எவை?

……

……

……

……

4. மண்வளங்குன்றலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 3ஐ தருக?

……

……


……

……

www.ikeau.lk

2. A. பயிர்ச்செய்கைநடவடிக்கையின் ஆரம்பச்செயற்பாடாகமண் பண்படுத்தல் அமைகின்றது. மண்பண்படுத்தல்உபகரணங்கள் கீழேகாட்டப்பட்டுள்ளன.





A B C

1. தரப்பட்டஉபகரணங்களை இனங்காண்க.

   .....
   .....
   .....

2. மனித வலுவால் செயற்படுத்தப்படும் துணைப்பண்படுத்தல் உபகரணங்கள் 3ஐக் குறிப்பிடுக.

   .....
   .....

3. இடைப்பண்படுத்தல் என்றால் என்ன?

   .....
   .....

B.

1. நீர்ப்பாசனத்தின் நோக்கங்கள் 4ஐ குறிப்பிடுக

   .....
   .....

2. நீர்பாசனத்தில் செல்வாக்குச் செலுத்தும் பயிர்க் காரணிகள் 4ஐ குறிப்பிடுக

   .....
   .....

3. நீரை மேலுயர்த்தும் பாரம்பரிய முறைகள் 3ஐ குறிப்பிடுக

   .....
   .....

C. விவசாயிஒருவர் தனது தோட்ட நிலத்தில் நீர்வடிப்பு பற்றி அறிந்து நீர்ப்பாசனத்தை மேற்கொள்ள விரும்புகின்றார்.

1. நீர் வடிப்புப்பற்றி அறிந்து கொள்ள நீர் செய்யும் இலகுவான பரிசோதனைமுறை ஒன்றைச் குறிப்பிடுக.

   .....
   .....

2. நலிவானநீர் வடிப்பினால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் 3ஐ குறிப்பிடுக

   .....
   .....

3. நீர் வடிப்பை மேம்படுத்துவதற்கு எவ்வாறான வடிகால் தொகுதிகளை அமைக்கலாம்?

   .....
   .....

www.lkedu.lk

D. வித்துக்களின் தூய்மையைக் கண்டறிவதற்கான மாணவன் ஒருவன் மேற்கொண்ட பரிசோதனையின் முடிவுகள் தரப்பட்டுள்ளன.

	இடப்பட்டவித்துக்கள்	முளைத்தவித்துக்கள்
வித்துA	80	50
வித்துB	70	45
வித்துC	90	85

1. வித்துமுறைக்கும் திறன் அதிகம் கொண்ட வித்து தொகுதி எது?

   .....

   .....

2. வித்துமுளை திறனின் சதவீதத்தைதுணியும் 3 முறைகளைக் குறிப்பிடுக?

   .....

   .....

3. வித்துக் சிகிச்சை என்றால் என்ன?

   .....

   .....

4. விவசாயத் திணைக்களத்தின் அத்தபட்சிப்படுத்தப்பட்ட வித்துப் பொதிகளில் இடும் சுட்டியிலிருந்து பெறக்கூடிய தகவல்கள் எவை?

   .....

   .....

***

www.lkedu.lk